**டொம்பே பிரதேச சபை**

--------------------------

**கம்பஹா மாவட்டம்**

-------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

---------------------

### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

----------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு சமர்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து டொம்பே பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

--------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 2014 ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் காட்டப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளை திருத்தம் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உறுதி இல. 17143 ஆகிய வாகே வத்த அல்லது மாலிகாவத்த பேச்சர்ஸ் 13.44 பேச்சர்ஸ் உள்ள காணியின் பெறுமதி ரூபா 2,000,000 கணக்கீட்டிற்கும் மற்றும் நிலையான சொத்து பதிவேட்டிற்கும் ரூபா 200,000 என பதியப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------

(அ) ஏசியன் அபிவிருத்தி வங்கியில் கடனாக பெற்றுக்கொண்ட ரூபா 2,897,764 மீதி பற்றிய உறுதிப்படுதல்களை கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மக்கள் வங்கியில் 2015 ஜனவரி 1 ஆம் திகதி ரூபா 7,127,650 பெறுமதியான நிலையான வைப்பு சம்மந்தமாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு வட்டி வருமானம், வட்டி வீதம், பிடித்து வைத்தல் வரித்தொகை ஆகிய விபரங்கள் உள்ளடங்கிய வங்கி கூற்று எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு மீதி நிலுவை மட்டும் கொண்டு வரப்பட்டு கணக்கீடுகளில் காட்டப்பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 89,727,106 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 40,395,817 ஆக விளைந்திருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு டொம்பே உப அலுவலகத்தின் வங்கிக் கணக்கின் மீதி ரூபா 3,332,126 காணப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இவ் வங்கிக் கணக்கில் காசு பிரதான அலுவலக கணக்கிற்கு மாற்றப்படாது இருந்ததால் சபை நிதி சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 06 நோக்கத்திற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 453,056 பெறுமதியான முற்பணங்களை தீர்ப்பனவு செய்ய நிதி ஒழுங்கு விதி 371 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதில் இரு நோக்கங்களுக்காக எடுத்த ரூபா 150,556 முற்பணங்கள் 7 வருடத்தில் இருந்து 10 வருடகாலம் முடிவடைந்த போதிலும் அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீதி ரூபா 302,500 முற்பணங்கள் தீர்ப்பனவு செய்ய காலதாமதம் 1 ½ மாதத்தில் இருந்து 9 மாதம் வரை காணப்படுகின்றது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மை வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம்

செயலாளர் மீளாய்வாண்டில் அனுப்பிய மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மையான வருமானம், கிடைக்கவேண்டிய வருமானம் என்பவற்றின் விபரம் வருமாறு.

| வருமான விடயம் | பாதீடு (ரூபா) '000 | உண்மை (ரூபா) '000 | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை (ரூபா) '000 |
|---|---|---|---|
| ஆதனவரி | 6,111 | 7,193 | 2,913 |
| உரிமங்கள் | 7,300 | 7,583 | 280 |
| வாடகைகள் | 1,195 | 1,158 | 37 |

#### 2.3.2 வாடகைகள்

(அ) கிருந்திவல புதிய சொப்பிங் கடைத்தொகுதியில் உள்ள 3 கடைகள் சம்மந்தமாக 2011 ஆம் ஆண்டில் இருந்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரைக்கும் கொண்டு வரப்பட்ட ரூபா 2,809,715 முற்பணம் (ஆரம்பத்தில் கட்டிய பணம்) 2016 ஏப்ரல் 07 ஆந் திகதி வரைக்கும் ரூபா 1,214,945 அறவிடப்பட்டுள்ள போதிலும் மேலும் ரூபா 1,594,770 அறவிடப்படவேண்டியிருந்தது.

(ஆ) பூகொட மாட்டிறைச்சிக்கடை மற்றும் சந்தை ஆகியவற்றின் கேள்வி ஒப்பந்தப்படி நீர், மின்சாரம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிற்கும் ரூபா 25,000 வீதம் உத்தரவாத வைப்பு வைக்க வேண்டிய போதும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------

### 3.1 விளைவற்ற மற்றும் குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்

------------------------------------------------------------------------------

கிருந்திவல பொது சந்தை கட்டடத் தொகுதியின் இலக்கம் 23 ஆம் கடை 2014 ஏப்ரல் மாதத்தில் இருந்து மூடியிருந்த போதும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அறவிடவேண்டிய வாடகை ரூபா 39,600 காணப்படுகின்றது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

-------------------------

#### 3.2.1 செயற்றிட்ட தாமதம்

---------------------------

(அ) 2014 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட பல்வேறு வேலைத்திட்டங்களுக்கான ஒதுக்கீடு தீர்க்கப்படாமையினால் 2015 ஆம் ஆண்டு சபை வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கி வைத்த தொகையில் ரூபா 13,408,200 வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் என்ற திட்டத்தில் 24 ஒப்பந்தங்களிற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. 2016 பெப்ரவரி வரை இந்தப்பணம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. 2015 மார்ச் 16 ஆந் திகதியில் உள்ளூராட்சி ஆணையாளரின் எல்பிடி/ஜிஎம்/03 ஆகிய கடிதத்தின் பிரகாரம் ரூபா 1,527,236 பெறுமதியான இரு வேலைத்திட்டங்களுக்கு சபை நிதியில் கொடுப்பனவு செய்வதற்காக அனுமதியை வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 9,000,000 பெறுமதியான சபையின் 37 ஒப்பந்தங்களிற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் இவ் ஒப்பந்தங்களில் ரூபா 6,525,000 பெறுமதியுடைய 25 ஒப்பந்தங்களிற்கு ஒதுக்கீடு முடிவடைந்துள்ளதனால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரைக்கும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் மேல் மாகாணத்தில் பொது பாதீட்டு நன்கொடை நிதி மூலம் வீதி அபிவிருத்திக்காக ரூபா 4,165,000 பெறுமதியான 14 செயற்றிட்டங்கள் சபைக்கு கிடைத்துள்ளது. குறித்த செயற்திட்டத்திற்கான ஆரம்பதிகதி மற்றும் முடிவடையும் திகதியின் பிரகாரம் அபிவிருத்தி செய்வதற்கு 2 - 11 நாட்களுள் செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டிருந்தது. குறித்த அபிவிருத்தியானது சரியான முறையில் செய்யப்பட்டுள்ளதனை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதுள்ளது. தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்கு கிடைக்கப்பெற்ற 3 செயற்திட்டங்கள் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டிருக்காமையால் ரூபா 2,000,000 ஒதுக்கீடு சபைக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. காலப்பகுதி போதாததன் காரணத்தினாலும் 01 செயற்திட்டத்தின் காணி உறுதி தொடர்பான பிரச்சனையாலும் குறித்த செயற்திட்டம் மேற்கொள்ளமுடியாதிருந்தது.

### 3.3 செயற்பாட்டு மீளாய்வு

------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 178.5 சதுர கிலோமீற்றரான சபையின் எல்லைக்குட்பட்ட 468 வீதிகள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த வீதிகள் கொங்கிறீட், கிரவல் மற்றும் தார் என வகைப்படுத்தி வரைபடம்

வரையாது காணப்பட்டதுடன் மற்றும் 2012 ஆம் ஆண்டின் பின்னர் வீதி தொடர்பான பதிவேடு பதிவு செய்யப்படாமல் காணப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் எல்லைக்குட்பட்ட 04 பொது நூலகங்களின் 10 கிராம நூலகங்கள் உள்ளன. இருப்பு கணிப்பு சபை அறிக்கையின் பிரகாரம் பல்பிட்ட கிராம நூலகம் யகபே பொது மண்டபத்தின் உடைந்த கட்டடத்தில் இயங்கி வருவதனால் புத்தகங்கள் மழையில் நனைந்து பாவிக்க முடியாத நிலையில் காணப்படுவதனாலும் பாவனைக்கு உட்படுத்தாத புத்தகங்களை மாற்றம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையாலும் நூலக மேற்பார்வையாளர் வேலைப் பளுவினால் நூலகத்திற்கு வராமையாலும் புத்தகங்களை சரியான முறையில் ஒப்படைக்காமையாலும் புத்தகங்கள் தொலைந்திருந்தமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(இ) 2013 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் இருந்து திசெம்பர் மாதம் வரையும் மற்றும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் கிடைக்க வேண்டிய சொத்துக் கடன் வட்டி முறையே ரூபா 111,610 , ரூபா 321,792 பெறுமதியானவை மீளாய்வாண்டில் தீர்ப்பனவு செய்வதற்காக எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

2015 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி பாதீடு மற்றும் உண்மையான ஆளணியினர் விபரம் பின்வருமாறு.

| விபரம் | அனுமதிக்கப்பட்ட ஆளணி | உண்மையான ஆளணி | மேலதிக ஆளணி | நிரப்பப்பட வேண்டிய ஆளணி |
|---|---|---|---|---|
| பதவி நிலையினர் | 05 | 05 | - | - |
| முதலாம் நிலையினர் | 142 | 147 | 05 | - |
| இரண்டாம் நிலையினர் | 52 | 51 | - | 01 |
| ஒப்பந்த அடிப்படையில் | - | 01 | 01 | - |
| | **199** | **204** | **06** | **01** |

தார் உற்பத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ஊழியர்களை பயன்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து நவம்பர் வரையும் 8 – 11 வரையான ஊழியர்களையும் பயன்படுத்தி ரூபா 1,232,300 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆட்சேர்ப்பு செய்யும் போது ஆட்சேர்ப்பு நடைமுறைகள், உரிய நியமன கடிதம், கடமை பட்டியல் போன்றன சரியான முறையில் வழங்கப்பட்டிருக்காததுடன் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(ஊ) ஒப்பந்தக் கட்டுப்பாடு